# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண்.52 /2015**

திரு. S. அசோகன்,
த/பெ சங்கரலிங்கம்,
185ஏ, மதுரை ரோடு,
அருப்புக் கோட்டை ........மேல் முறையீட்டாளர்
(திரு . P. தேரிராஜன், வழக்கறிஞர் )

எதிர்

1. அருப்புக்கோட்டை மணி நகரம் சத்திரிய நாடார் உறவின்முறை
பொது அபிவிருத்தி டிரஸ்ட், அதன் தற்காலிக தலைவர்,
காமாட்சிபுரம்,
மணி நகரம், அருப்புக்கோட்டை ......... எதிர்மனுதாரர்–1
(திரு. M.S. பாலசுப்பிரமணிய அய்யர், வழக்கறிஞர் )

2. இளமின்பொறியாளர்,
பகிர்மானம்/நகரம்/வடக்கு,
விருதுநகர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அருப்புக்கோட்டை
......... எதிர்மனுதாரர்–2
(திரு.S.M. ஜெயக்குமார், இளமின் பொறியாளர்/அருப்புக்கோட்டை )

**கேட்புரை நாள்: 9.9.2015 மற்றும் 30.10.2015**

**ஆணை நாள் : 7.12.2015**

1. திரு. S. அசோகன், த/பெ சங்கரலிங்கம், அருப்புக்கோட்டை, அவர்களின் 30.6.2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.52/2015ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 9.9.2015 மற்றும் 30.10.2015 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரையின்

பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள், ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, நெசவாளர் காலணி, மின்இணைப்பு எண்.07–203–011–16–ஐ எதிர்மனுதாரர் வகையாறவினரான Trustee MNUT என்று பெயர்மாற்றம் செய்துள்ளதனை ரத்து செய்து மீண்டும் மனுதாரர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்து உத்தரவிட வேண்டுமாய் பிரார்த்திக்கப்படுகின்றது.

## 2. வழக்கின் சுருக்கம்

2.1 மின்இணைப்பு எண்.07–203–011–16, மேல்முறையீட்டாளரின் தந்தை திரு. சங்கரலிங்கம் அவர்கள் பெயரில் மதுரை ரோடு க.எண்.185ஏ என்ற விலாசத்திலுள்ள ரைஸ் மில்லிற்கு கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மின்இணைப்பின் பெயர் மாற்றம் திரு. எஸ். அசோகன் என்று 2000–ஆம் ஆண்டு மாற்றப்பட்டுள்ளது.

2.2 மின்இணைப்பு எண்.07–203–011–16–ஐ தங்கள் பெயருக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்று Trustee, M.N.U.T. அவர்கள் விண்ணப்பத்தின் பேரில் பெயர்மாற்றம் 19.11.2014 அன்று செய்யப்பட்டுள்ளது.

2.3 தன்னுடைய பெயரிலிருந்த மின்இணைப்பு தன்னுடைய சம்மதம் இல்லாமல் ஒரு தலைபட்சமாக மேலும், நீதிமன்றத்தில் வழக்குகள் உள்ளபொழுது மாற்றப்பட்டது தவறு என்றும்,அந்த பெயர் மாற்றத்தை ரத்து செய்யவேண்டும் என்றும் மேல்முறையீட்டாளர் விருதுநகர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு முறையீடு செய்துள்ளார். மன்றம் தன்னுடைய தீர்வை 22.6.2015 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. மேற்கண்ட ஆணையில் திருப்தியில்லாததால் மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டை மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

3.    <u>மன்றத்தின் தீர்வு</u>

விருதுநகர் மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 22.6.2015 அன்று தெரிவித்துள்ளது அந்த தீர்வின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"தீர்ப்பு:*

*மின்இணைப்பு எண். எண்.07–203–011–16, திரு. அசோகன் பெயரிலிருந்து காரியதரிசி, மணிநகரம் உறவின்முறை என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்யும்பொழுது எந்த ஆட்சேபனையோ நீதிமன்ற உரிமையியல் வழக்கு விபரம் மின்வாரியத்திற்கு தெரியாத காரணத்தினாலும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை விதிகளின்படி ஆவணங்கள் பெற்று பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என முடிவு செய்து மன்றத்தில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. மேலும், மனுதாரரால் செலுத்தப்பட்ட காப்புவைப்புத்தொகையை அவர்கோரும் பட்சத்தில் மின்சார ஒழுங்குமுறை விதிகளின்படி திருப்பித்தர நடவடிக்கை எடுக்கப்படும் "*

4.    <u>மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்கள்</u>

4.1    தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் லிமிடெட் க.எண்.மே.பொ/ப/ விருது/உ.செ.பொ/ம.தொ.அ./தொ.நி.உ/கோ.CGRF/அ.எண்.786/2015, நாள் 22.6.2015 உத்தரவில் "செயற்பொறியாளர்/பகிர்மானம்/அருப்புக்கோட்டை அவர்கள் தனது பதிலுரையில் உள்ள கருத்துக்களை வலியுறுத்தினார். மேலும், பெயர் மாற்றம் செய்யம்போது வழக்குகள் விபரம் எதுவும் தெரியாது என்று உதவி மின்பொறியாளர்/நகர்/வடக்கு அவர்கள் எந்த நீதிமன்றத்திலும் "இது சம்மந்தமாக சாட்சி அளிக்கவில்லை என்றும் தெரிவித்தார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது அப்பட்டமான பொய். உதவி மின்பொறியாளர் அருப்புக்கோட்டை டி.மு. கோர்ட்டு O.S. No.169/2004–ல் சாட்சியம் அளித்துள்ளது குறித்து சான்றிட்ட நகல் எடுத்து இத்துடன் முக்கிய ஆவணமாக இணைக்கப்பட்டுள்ளது. சமூகம் அலுவலக அதிகாரியே பொய்யுரைத்துள்ளது சட்டபடிக்கு ஏற்கத்தக்கதல்ல.

4.2    சிவில் வழக்கு உள்ள விபரம் நன்கு அறிந்தும் தெரிந்துமே உதவி மின்பொறியாளர்/நகர்/வடக்கு அவர்களால் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது தெள்ளத்தெளிவான உண்மை. மேலும், அவர் பதிலுரையில் கருத்துக்களை வலியுறுத்தினார் என்று கூறப்பட்டுள்ளதில் என்ன பதிலுரை சமர்ப்பித்தார் என்பதற்கு எழுத்து மூலமான நகல்கள் எதுவும் மனுதார்க்கு வழங்கப்படவில்லை.

4.3 19–11–2014 ஆம் தேதிக்கு முன் மின்கட்டணம் பெயர் மாற்றம் செய்யப்போவதாக மனுதார்க்கு எந்தவொரு தகவலும் அளிக்கப்படவில்லை.

4.4 அசோகன் என்ற மனுதாரர் பெயரில் உள்ள மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ய மனுதாரரிடம் Trustee M.N.U.T ஆட்சேபனையின்மை கடிதம் எதுவும் பெறவில்லை.

4.5 மனுதாரர் பெயரில் உள்ள டெபாசிட்டுடன் மின்இணைப்பை வேறு நபர் பெயரில் மாற்றியதன் மர்மம் புரியவில்லை.

4.6 குறைவழுத்த மின்இணைப்பின் பெயர் மாற்றுவதலுக்குரிய குறிப்புகள் அடங்கிய அட்டவணை 7(அ)–ல் மின் விநியோகம் மாற்றம் செய்வதற்கு ஏற்பட்ட நிர்ப்பந்த சூழ்நிலைகள் கலத்தில்–1 வியாபாரத்தை என்று மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது தவறானதாகும். அதுபோல், சரிபார்க்கப்பட்ட ஆவணங்கள் விபரத்தில் மின் ரசீது பத்திர நகல், SSI Certificate குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதிகள் தவறானதாகும். மேற்படி விலாசத்தில் மனுதாரர் ஏற்கனவே பெற்றுள்ள Permanent SSI Certificate இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி விலாசத்தில் அமிர்தம் ரைஸ்மில் க்காக சான்று பெறப்பட்டுள்ளது. அதனையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மனுதார் எவருக்கும் மனுதாரரின் தொழிலை கிரையம் கொடுக்கவில்லை, தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலக பொறியாளர் எவரும் ஸ்தலத்தை பார்வையிடவில்லை. பார்வையிட்டிருப்பின் மனுதாரின் அனுபவத்தில் அமிர்தம் ரைஸ்மில் உள்ள விபரம் அறிந்திருப்பார்கள்.

4.7 மாறுதல் செய்வதற்காக விண்ணப்பித்த நாள் 18–11.2014 என்று கண்டுள்ளது. அடுத்த நாளே அவசரகதியில் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

4.8 படிவம்–4 (பார்க்க ஒழுங்குமறை விதிகள் 5(7)) உறுதியேற்பில் மனுதார் பெயரில் உள்ள மின்னிணைப்பை பெயர் மாற்றம் செய்து தரக்கேட்டதாகவும், அவர்களால் தரப்பட்ட ஆவணங்களை மனுதார் பார்வையிட்டு கணக்கு எண்ணை நுகர்வோர் வேண்டியபடி பெயர் மாற்றம் செய்து தர இசைந்ததாகவும் பொய்யுரைக்கப்பட்டுள்ளது. நடைபெற்றுக்கொண்டு வரும் சிவில் வழக்குகளை மறைத்து பொய்யான உறுதியேற்பு செய்துள்ளமையால் அதன்

காரணமாகவே மின்இணைப்பு பெயர் மாற்றத்தை எடுத்த எடுப்பிலேயே ரத்து செய்ய வேண்டியது அவசியமும் நியாயமுமாகும்.

4.9 படிவம் எண்.1–ல் மனுதாரர் அசோகன் என்பவரிடம் இருந்த இருப்பிடம் இப்போது எதிர்மனுதாரது உடைமையாகி உள்ளது என்று கூறியுள்ளது அப்பட்டமான பொய், அதற்கான ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா ? என்பது மின்வாரிய அலுவலகத்தினால் சரிவர பார்வையிடப்படவில்லை.

4.10 Name Transfer Form–ல் மின்இணைப்பு டிரஸ்டி மணிநகரம் நாடார்கள் உறவின்முறை பொது அனுபவத்தில் உள்ளதாக பொய்யாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனையும் மின்வாரிய அலுவலக ஊழியர்கள் எவரும் விசாரிக்கவில்லை. மனுதாரது அனுபவத்திலேயே இன்று வரை உள்ளது. எதிர்மனுதார் ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள விருதுநகர் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள O.S. No.58/2014 மற்றும் O.S. No.57/2014 வழக்குகளிலேயே மனுதாரிடம் அனுபவம் உள்ளது என்பது எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஏனெனில் மேற்படி வழக்குகள் மனுதாரிடருந்து அனுபவ மீட்பு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளாகும்.

4.11 Name Transfer Form–லும் Signature of Transferor கையொப்பமும் இல்லை. மணிநகரம் நாடார் உறவின்முறை மெம்பரும் ஏரியா கவுன்சிலருமான அரசியல் செல்வாக்குடன் கூடிய முருகேசன் என்பவரின் சாட்சி கையொப்பம் இடப்பட்டுள்ளது. ஆனால் அவருக்கே எதற்காக சாட்சிக் கையொப்பம் இட்டோம் என்பதனை அறியாமல் கையொப்பம் இட்டுக் கொடுத்துள்ளார். மனுதார் யாருக்கும் தாவா மின்இணைப்பை கிரையம் செய்து கொடுக்கவில்லை எனபது குறிப்பிடத்தக்கது.

4.12 Special Guarantee Letter –ம் பூர்த்தி செய்யப்படாமல் சாட்சிக்கையொப்பம் இல்லாமல் உள்ளது.

4.13 தமிழ்நாடு மின்வாரிய அலுவலக கோப்புகளின் படிக்கு 26.9.2014–ம் தேதி மணிநகரம் சத்திரிய இந்துநாடார்கள் உறவின்முறை பொதுமகமை தங்களுக்கு அனுப்பிய கடிதத்திலேயே

"S. அசோகன் என்பவரை உறவின்முறைக்கு அழைத்து வாடகை உடன்படிக்கை அக்ரிமெண்ட் அசோகன் என்ற பெயருக்கு மாற்றிக்கொள்ளுங்கள் என்றும் அறிவுறுத்தப்பட்டது" என்று தெளிவாகத் கூறப்பட்டுள்ளது.

4.14 அருப்புக்கோட்டை நகராட்சியிலும் சிவில் வழக்குகள் நடைபெறுவதனை மறைத்து 15.9.2014–ம் தேதி வீட்டுவரி விதிப்பு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனை வைத்து எதிர்மனுதாரரால் பொய்யான மனு செய்யப்பட்டுள்ளது, 15–9–2014–ம் தேதி நகராட்சி பெயர் மாற்றம் செய்ய உத்தவிட்டு அடுத்தநாளே 16–9–2014–ம் தேதியே ரசீது போடப்பட்டுள்ளதன் தன்மையை அறியத் தவறிவீட்டீர்கள்.

4.15 Government of Tamil Nadu, Department of Industries and Commerce ல் 17–11–2014 ம் தேதிதான் வழங்கப்பட்டுள்ளது. அதுவும் பொய்யுரைத்துப் பெறப்பட்டுள்ளது. மதுரை ரோடு கதவு எண்.185ஏல் எக்காலத்திலும் மணி நகரம் சத்திரிய இந்து நாடார்கள் உறவின்முறை பொது மகமை ரைஸ்மில் கிடையாது.

4.16 மனுதாரின் தந்தை இறந்த பின் தொடர்ந்து மனுதாரரை வாடகைதாரராக ஏற்றுக்கொண்டு வாடகை வாங்கிகொண்டு எதிர்மனுதாரரான அருப்புக்கோட்டை மணி நகரம்நாடார் உறவின்முறையார் வாடகைக்கு ரசீதும் கொடுத்து வந்தனர். பின் 31–5–1998 ம் தேதி எதிர்மனுதாரர்கள் மேற்படி உறவின்முறையார் காலி செய்து தருமாறு மிரட்டி இடையுறு செய்ய எத்தனித்ததால் சமூகம் அருப்புக்கோட்டை டி.மு. கோர்ட்டில் O.S. No.160/1998 வழக்கு தாக்கல் செய்து மனுதார்க்குச் சாதகமாக 11–7–2001ம் தேதி தீர்ப்பும், தீர்ப்பாணையும் ஏற்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணை மீது மணிநகரம் நாடார் உறவின்முறையார் அப்பீல் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

4.17 எதிர்மனுதார் வகையறாவினராக மணிநகரம் நாடார் உறவின்முறையார் அனைவரும் கூடி மனுதாரின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்தமையால் அருப்புக்கோட்டை சப் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்து அதில் இன்செக்ஷன் ஆர்டரும் பெற்றுள்ளார். மேற்படி வழக்கு

அருப்புக்கோட்டை டி.மு. கோர்ட்டுக்கு மாற்றலாகி தற்சமயம் O.S. No.169/2004 வழக்கு தாக்கல் என்று நம்பராகி நிலுவையில் உள்ளது.

4.18 மனுதாரரை காலி செய்து தருமாறு அருப்புக்கோட்டை டி.மு. கோர்ட்டில் எதிர்மனுதாரரான மணிநகரம் நாடார் உறவின்முறையார் O.S. No.114/2008 வழக்கு தாக்கல் செய்து அதுவும் நிலுவையில் உள்ளது.

4.19 மேற்படி வழக்கின் தொடர்ச்சியாக மனுதார் C.T. O.P. No.1/2008 தாக்கல் செய்து அதுவும் நிலுவையில் உள்ளது.

4.20 மனுதார் மீது எதிர்மனுதார்ரான மணிநகரம் உறவின்முறையார் விருதுநகர் மாவட்ட கோர்ட்டில் O.S. No.57/2014, O.S. No.58/2014 ஆகிய வழக்குகளும் தாக்கல் செய்து அதுவும் நிலுவையில் உள்ளது.

4.21 விருதுநகர் மாவட்ட நீதிமன்றத்தில் மனுதார் மீது எதிர்மனுதார்/மணிநகரம் நாடார் உறவின்முறையார் Tr. O.P. No.20/2014, Tr. O.P. No.21/2014 & Tr. O.P. No.22/2014 தாக்கல் செய்து அவைகளும் நிலுவையில் உள்ளது அதற்கு சான்றாக மனு நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

4.22 மீண்டும் மனுதாரின் பெயருக்கு மின்கட்டணப் பெயர் மாற்றம் செய்திட தமிழ்நாடு மின்சார வாரிய நிர்ணயிக்கும் கட்டணத்தை மனுதார் செலுத்த தயாராக உள்ளார்.

4.23 அருப்புக்கோட்டை டவுன், மதுரை ரோடு, தகவு எண்.185ஏ–ல் உள்ள மனுதார் தரைவாடகைதாராக இருந்து வருவதனால் அதன் அடிப்படையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் வழங்கப்பட்ட மின் இணைப்பையும் மின் இணைப்பு குறித்து டெபாசிட்டுகளையும் அவரது சம்மதமில்லாமல் மாற்றம் செய்ய தமிழ்நாடு மின்சார வாரிய நிலை ஆணைகளில் எந்தவொரு விதியும் நிர்ணயிக்கப்படவில்லை. மாறாக வாடகைதாரர் என்று அறிந்தால் நுகர்வோர் என்பதனை கவனத்தில் கொண்டு, அவரது பெயரில் தனித்து மின்கட்டணம் ஏற்படுத்தலாம் என்பதே மின்வாரிய விதி, அதனை மீறி பல சிவில் வழக்குகள் நிலுவையில் உள்ளதனை கவனத்தில் கொள்ளாமல் மின்கட்டண பெயர் மாற்றம் செய்துள்ளது

இயற்கை நியதிக்கும், சட்டத்திற்கும் அப்பாற்பட்ட செயலாகும். தாவா மின்இணைப்பை பொறுத்த வரையில் மனுதாரரின் நுகரும் உரிமை மின்கட்டணப் பெயர்மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய அபாயகரமான சூழ்நிலை உள்ளது.

**4.24** சிவில் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நிலுவையில் இருந்தால் கூட அந்த வழக்கு தீர்ப்பின் இறுதியில்தான் முடிவெடுக்கப்படவேண்டும் என்பதனை தமிழ்நாடு மின்சார வாரியம் அடிப்படை விதியாகக் கொண்டுள்ளது. ஆனால், இந்த நிரில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளதனை எதிர்மனுதாரர் தரப்பினர் மறைத்து மின்கட்டணப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

**4.25** உதவி செயற்பொறியாளர் அவர்கள் **26–2–2015–**ம் தேதிய கடிதத்தில் பெயர்மாற்றம் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் வாரிய விதிமுறையின் கீழ் பெயர்மாற்ற உத்தரவு ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஏற்கனவே மனுதார், எதிர்மனுதாரர் உறவின்முறையார் மீது அருப்புக்கோட்டை டி.மு. கோர்ட்டில் O.S. No.160/**1998**ல் **11–7–2001** ம் தேதியே மனுதார்க்கு ஆதரவாக இறுதி தீர்ப்பும் தீர்ப்பாணையும் வழங்கப்பட்டுவிட்டது. அதனை நாளது தேதிவரை தமிழ்நாடு மின்சார வாரியம் கவனத்தில் கொள்ளாதது அடிப்படைத்தவறாகும். மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை மீறி மின்இணைப்பு பெயர்மாற்றம் செய்துள்ளது நீதிமன்ற உத்தரவை அவமதிப்பு செய்யும் செயலும் கூட.

**4.26** முந்தைய வழக்குகள் பல உள்ள விபரத்தை எடுத்துரைத்தும் சிவில் வழக்குகளில் மனுதார் அனுபவத்தில் உள்ளதனை எதிர்மனுதாரே ஒப்புக்கொண்டுள்ள நிலையில் உடனடியாக எதிர்மனுதார் கொடுத்த Indemnity Bond சரியானதல்ல என்பதனை கவனத்தில் கொண்டு புகார் எதிர்மனுதார்க்கு பெயருக்கு மாற்றிய பெயர் மாற்ற உத்தரவை ரத்து செய்திருக்க வேண்டும். புகார் எதிர்மனுதாரரிடம் எதற்காக Indemnity Bond பெறப்பட்டதோ அதனை வைத்தாவது பெயர் மாற்ற உத்தரவை ரத்து செய்திருக்க வேண்டும்.

## 5. <u>எதிர்மனுதாரர் (1) ன் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

5.1 கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ள நிலமும் மதுரை ரோடுக்கு அருகிலுள்ள இடமும் எதிர்மனுதாரர் –1க்கு சொந்தமானது ஆகும். எதிர்மனுதாரர்–1 ஒரு கிராம சமுதாயம் ஆகும். இந்த பிரதேசத்தின் சட்டங்களின்படி ஒரு கிராம சமுதாயம் சொத்துக்களுக்கு உரிமையாளராக இருக்க முடியும். மேலும், அந்த சொத்துக்களையும் மற்ற நிர்வாக காரியங்களுக்காகவும் தகுந்த மேலாண்மை முறையை பயன்படுத்தி கொள்ளலாம்.

5.2 மேற்கண்ட சொத்து முதலில் புஞ்சை பூமியாக இருந்துள்ளது. அதில் ஒரு கிணறும் கிணற்று நீரை இறைத்து விவசாயம் செய்ய தேவையான வசதிகளும் இருந்துள்ளது.

5.3 அருப்புக்கோட்டை நகரமாகி வரும் காலத்தில் வீட்டு மனைக்கு தேவைகள் அதிகமாயிருந்தன. அக்காலத்தில் திரு. சங்கரலிங்க நாடார் மற்றும் சன்ஸ் அவர்களுக்கும் எதிர்மனுதாரர் அவர்களுக்கு ஒரு ஒப்பந்தம் 26.6.1974–ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த வாடகை ஒப்பந்தம் 8 வருட காலத்திற்கு ஆனது. அந்த ஒப்பந்தத்தின்படி வாடகைதாரர் தேவையான கட்டிடங்களை உருவாக்கி கொள்ள வேண்டும் என்றும் ஒப்பந்த காலம் முடிந்த உடன் நிலத்தின் சொந்தக்காரர் கட்டிடங்களுக்கும் உரிமையாளர் ஆகிவிடுவார். வாடகைதாரர் இடத்தை காலி செய்து வாடகைக்கு எடுத்துள்ள சொத்தை அதில் ஏற்படுத்தியுள்ள கட்டிடங்கள் மற்றம் கட்டுமானங்களுடன் உரிமையாளரிடம் ஒப்படைத்து விட வேண்டும்.

5.4 மேற்கண்ட ஒப்பந்ததின்படி எதிர்மனுதார்–1 அந்த இடத்திலுள்ள கட்டிடங்களுக்கும் சொந்தக்காரர் ஆகிவிடுகிறார்.

5.5 மேற்கண்ட மாற்றத்திற்கு வேறு மாற்றுதல் ஆவணம் (Transfer deed) எதுவும் தேவையில்லை, Transfer of Property Act ன் பிரிவு 108–ன் படி, அதுமாறிவிடும். எனவே, சங்கரலிங்க நாடார் மற்றும் சன்ஸ் என்ற கூட்டு தொழில் நிறுவனத்திற்கு அந்த சொத்தில் ஏற்படத்தப்பட்டுள்ள கட்டிடங்களின் மீது எந்த உரிமையும் அல்லது ஈடுபாடு கொண்டாட முடியாது.

5.6 சங்கரலிங்க நாடார் மற்றும் சன்ஸ் என்ற கூட்டு தொழில் கரைக்கப்பட்டுவிட்டது (Dissolved) எனவே, அந்த கூட்டு தொழில் நிறுவனம் இனி இருக்க முடியாது . எனவே, சங்கரலிங்க நாடார் அவர்கள் தான் வாடகைதாரர் ஆவார். (மேலும், நிலமும் அதிலுள்ள கட்டிடங்களுக்கும்தான் வாடகை ஒப்பந்தம் என்று ஆகிவிடுகிறது. எனவே, வாடகை இடத்திற்கும் அதிலுள்ள கட்டிடத்திற்கும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5.7 சங்கரலிங்க நாடாருக்கு பிறகு அவருடைய வாரிசுகள், வாரிசு அடிப்படையில் வாடகை தாரர் ஆகிவிடுகிறார்கள். சங்கலிங்க நாடாரின் வாரிசுகள் கட்டிடத்துடன் கூடிய வளாகத்திற்கு வாடகைதாரர் ஆகிவிடுகிறார்கள். மேற்கண்ட நிலையில் ஒப்பந்தம், சில வருடங்கள் இருந்தது.

5.8 முதலில் போட்ட வாடகை ஒப்பந்ததின்படி நிலத்திற்கு மட்டும்தான் ஒப்பந்தம் கூட்டு தொழில் நிறுவனம், அங்கு கட்டிடம் கட்டியது, எனவே, வாடகைதாரர் (ஒப்பந்ததாரர்) கட்டிடத்திற்கு சொந்தக்காரர் ஆகவும் இடத்துக்கு வாடகை தாரராகவும் இருந்தார். ஆனால், ஒப்பந்த காலம் முடிந்தவுடன் நில உரிமையாளர், கட்டிடங்களுக்கும் சொந்தக்காரர் ஆகிவிட்டார். எனவே, அதன்பிறகு சங்கலிங்க நாடார் அல்லது அவரின் வாரிசுகள் அந்த கட்டிடத்தின் மீது உரிமை கொண்டாட முடியாது. பின்னர் சங்கலிங்க நாடார் கட்டிடத்திற்கும் நிலத்திற்கும் வாடகை ஒப்பந்ததாரர் ஆக ஆனதால் சங்கரலிங்க நாடார் அல்லது அவரின் வாரிசுகளுக்கு அந்த கட்டிடத்தின் மீது உரிமை கொண்டாட முடியாது.

5.9 எனவே, மேல்முறையீட்டாளர் அந்த கட்டிடங்களின் உரிமையாளர் அல்ல. அவ்வாறு உரிமம் கோருவது நில உடமைதாரரின் உரிமையை தடுப்பது ஆகும். அந்நிலையில் வாடகைதாரர் அந்த நிலத்தையும் கட்டிடத்தையும் விட்டு வெளியேற்றப்படவேண்டியவர் ஆவார். ஏற்கனவே கூறியதுபோல் முதலில் போடப்பட்ட வாடகை ஒப்பந்தம் புஞ்சை நிலத்திற்கும் அதிலுள்ள கிணறு மற்றும் நீர்இறைக்கும் சாதனங்களுக்குதான் எனவே, முதலில் போட்ட வாடகை ஒப்பந்தம் காலியான இடத்திற்கு என்பது தவறு. எனவே, மேல்முறையீட்டில் கூறப்பட்டுள்ளவைகள் தவறாக சித்தரிக்கப்பட்டவை என்றும், அதிகார எல்லையை கடந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், அவை முதல் எதிரியை கட்டுப்படுத்தாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

5.10 முதலாம் எதிரி வழக்கு எண்.O.S. No. 56 & 57/2014 என்ற வழக்குகளை மேல் முறையீட்டாளருக்கு எதிராக ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

5.11 மேல்முறையீட்டாளருக்கும் சங்கரலிங்க நாடாரின் மற்ற வாரிசுகளுக்கும் இடையில் பாக உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், அந்த பாக உடன்படிக்கையின்படி மேற்கண்ட கட்டிடங்கள் மேல்முறையீட்டாளருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே தெரிவித்துள்ளபடி கூட்டுதொழிலில் பாகஸ்தர் என்ற பொழுதும் சங்கரலிங்க நாடார் அவர்களுக்கு அந்த கட்டிடங்களின் மீது எந்த உரிமையும் கிடையாது. எனவே, பாகப்பிரிவினையை காட்டி மேல்முறையீட்டாளர் அந்த கட்டிடங்களின் மீது உரிமை கொண்டாட முடியாது. எனவே, மேல்முறையீடு தவறானது, நிலைக்காது.

5.12 நகராட்சி வழங்கும் ரசீதும் மின்சார வாரியம் வழங்கும் மின்கட்டண ரசீதும் ஒரு சொத்தின் மீது ஒருவருக்கு உரிமையை கொடுக்காது. அவை அந்த சொத்தின் உண்மையான உரிமையாளரின் உரிமையை பாதிக்காது. எனவே, அந்த மாதிரியான காரணங்கள் எதுவும் ஏற்படக்கூடாது என்பதற்காக நகராட்சியின் சொத்துவரிக்கும், மின்இணைப்பின் பெயர் மாற்றமும் கோரி, எதிர்மனுதாரரால் பெறப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர், அந்த மாற்றங்களுக்கு ஆட்சேபனை தெரிவிக்க முடியாது. நிலம், எதிர்மனுதாரர்(1)க்கு சொந்தமானது மற்றும் சட்டப்படி, கட்டிடங்களுக்கும் உரிமையாளர் ஆகிவிட்டதால், சங்கரலிங்க நாடாரின் வாரிசுகள் யாரும் கட்டிடங்களின் மீது உரிமை அல்லது பங்கு கோர முடியாது. அவ்வாறு கோரும் உரிமைகள் நிலைக்கத்தக்கவையல்ல.

5.13 மேல்முறையீட்டாளர் மாநகராட்சி வரி மாற்றத்தின் பொழுது ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை. எனவே, அதேபோல் மின்இணைப்பின் பெயர் மாற்றத்திற்கும் அவர் எழுப்பும் ஆட்சேபனைகள் ஏற்கதக்கது மற்றும் நிலைக்கத்தக்கது அல்ல. எனவே, மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

6. <u>எதிர்மனுதாரர் (2) ன் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

6.1 இந்த தாவா மின் இணைப்பு எண்.203–011–16க்கு கடந்த 19.11.2014ம் தேதியிட்டு ஆவணங்களின் அடிப்படையில் பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

6.2 மனுதாரர் அருப்புக்கோட்டை டவுன் இளமின் பொறியாளர், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளதாக கூறியிருப்பதில் மனுதார் தாக்கல் செய்துள்ள ஆவண விபர பட்டியலில் O.S. No.169/2014 என்றும், மேல்முறையீட்டு மனுவில் O.S. No.169/2008 என்றும் 169/2004 என்றும் மாறி மாறி குறிப்பிட்டுள்ளார். இந்த எதிர்மனுதார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தாக மனுதார் கூறியிருப்பதில் எந்த தேதியில் என்ன விபரத்திற்காக சாட்சியம் அளித்தார் என்பதை குறிப்பாக கூறாமல் மறைத்துள்ளார்.

6.3 உண்மையில் மனுதார் குறிப்பிட்டுள்ள O.S. No.169/2004, O.S. No.57/2014, O.S. No.58/2015 மற்றும் C.T.O.P. No.1/2008, OS. No.160/1998, Tr. O.P. No.20/2014, Tr. O.P. No.21/2014 Tr. O.P. No.22/2014 ஆகிய எந்த வழக்கிலும் இந்த மின்சார வாரியம் ஒரு தரப்பினரே அல்ல. எனவே, இந்த எதிர்மனுதாரருக்கு மேற்படி வழக்குகள் குறித்தோ அதில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகள் குறித்தோ எந்த விபரமும் தெரியாது.

6.4 மேலும், மின்இணைப்பு பெயர்மாற்றம் என்பது வரிவிதிப்புக்களை தொடர்ந்து நடைபெறும் செயல்முறை ஆகும். வரிவிதிப்பு மனுதாரரின் பெயரில் இருந்து Trustee M.N.U.T. என்ற பெயருக்கு மாற்றப்பட்டதை தொடர்ந்தே செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின்

பெயரில் இருந்து வரிவிதிப்பு மாற்றம் செய்யப்பட்டதை மனுதார் ஆட்சேபிக்காத நிலையில் அதனுடைய தொடர் செயல்முறையான மின்இணைப்பு மாற்றத்தை ஆட்சேபிப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

6.5 மின்னிணைப்பு பெயர்மாற்றம் செய்யும்வரையில் மனுதாரரிடம் இருந்தோ மனுதாரரின் வழக்கறிஞரிடம் இருந்தோ எவ்வித ஆட்சேபனை கடிதமும் பெறப்படவில்லை.

6.6 மனுதார் மின்இணைப்பு மனுதாரரின் அனுபவத்தில் உள்ளதாக O.S. No.58/2014, O.S. No.57/2014, வழக்குகளில் குறிப்பிட்டுள்ளதாக கூறியிருப்பதில் மேற்படி வழக்குகளில் மின்வாரியம் ஒரு தரப்பினரே அல்ல.

6.7 மேற்படி பெயர் மாற்ற படிவங்களில் முறையாக பூர்த்தி செய்யப்படவில்லை என்பதும் முருகேசன் எதற்காக என்று அறியாமல் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார் என்பது ஆட்சேபிக்கப்படுகிறது.

6.8 சிவில் வழக்குகளை மறைத்து அருப்புக்கோட்டை நகராட்சியில் பெயர்மாற்றம் செய்யப்பட்டு பொய்யுரைத்து ரசீது ஏற்படுத்தப்பட்டது என்று மனுதார் கூறியிருப்பது குறித்து இந்த எதிர்மனுதாரருக்கு எதுவும் தெரியாது.

6.9 Government of Tamil Nadu Department of Industries and Commerce-ல் 17–11–2014–ல் பொய்யுரைத்து சான்றிதழ் பெறப்பட்டது என்பதை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மேலும், மதுரை ரோடு, கதவு எண்.185A-ல் 1–ம் எதிர்மனுதார் உறவின்முறைக்கு ரைஸ்மில் கிடையாது என்பதும், ஷை இடத்தில் எந்த கட்டுமானங்களும் பொது முகமையில் கட்டப்பட்ட கட்டுமானங்கள் இல்லை என்பதும், நவம்பர் 14–ம் தேதி தான் ஷை இடத்தில் மிசினரி மற்றும் தளவாட இயந்திரங்கள் Install செய்யப்பட்டது என்று Government of Tamil Nadu Department of Industries and Commerce–ல் குறிப்பிட்டுள்ளதாக கூறவதை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

6.10 தாவா சொத்தில் மனுதாரர் வாடகைதாரர் என்பதை மனுதாரரே ஒப்புக்கொள்ளும் நிலையில் கட்டிட உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரர் என்பதையும் மனுதார் ஒப்புக்கொள்ளும் நிலையில் கட்டிட உரிமையாளர் பெயரில் மின்இணைப்பு இருப்பதை வாடகைதாரரான மனுதார் ஆட்சேபணை செய்ய இயலாது.

6.11 மனுதார் O.S. No.160/1998–ல் தீர்ப்பு பெற்றிருப்பதாகவும் கூறியிருப்பதில் ஷை வழக்கிலும் மின்வாரியம் தரப்பினர் அல்ல. மனுதார் இன்ஜக்சன் ஆர்டர் பெற்றுள்ள O.S. No.169/2004 வழக்கிலும் O.S. No.114/2008 வழக்கிலும் C.T.O.P. No.1/2008 மற்றும் O.S. No.57/2014 மற்றும் 58/2014 மற்றும் விருது நகர் மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள Tr.O.P.No.20/2014, Tr.O.P.No.21/2014, Tr.O.P.No.22/2014 ஆகிய எந்த வழக்கிலும்

மின்வாரியம் தரப்பினர் அல்ல. மேலும், மின்வாரியம் மீதான எந்த உத்தரவும் நீதிமன்றத்தில் இதுவரை பிறப்பிக்கப்படவில்லை.

**6.12** மனுதார் வாடகைதாரர் என்பதால் வாடகைதாரர் பெயரில் தனி மின்இணைப்பு ஏற்படுத்தலாம் என்று கூறியிருப்பதில் மனுதார் வாடகைதாரர் என்பதும் 1ம் எதிர்மனுதார் உரிமையாளர் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும்.

**6.13** உதவி செயற்பொறியாளர் **26–2–2015**ல் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மின்பெயர்மாற்றம் உத்தரவு ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளது ஒப்புக் கொள்ளப்படுகிறது. இந்த எதிர்மனுதாரரும் நீதிமன்ற தீர்ப்பிற்கு கட்டுப்பட்டு நடக்க தயாராகவே உள்ளார். மனுதார் குறிப்பிடும் O.S.No.160/1998ல் 11.7.2001-ம் தேதிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பற்றி மின்வாரியத்திற்கு எதுவும் தெரியாது . மேற்படி தீர்ப்புகள் குறித்தோ, நிலுவையில் உள்ள வழக்கு விபரங்கள் குறித்தோ மனுதார் மின்வாரியத்திற்கு எந்த ஆட்சேபணை கடிதமும் அனுப்பவே இல்லை. இந்நிலையில் இந்த எதிர்மனுதார் நீதிமன்ற உத்தரவை அவமதிப்பு செய்ததாக கூறியிருப்பது பொய்யானது.

**6.14** உண்மையில் இந்த மனுதார் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் விருதுநகரில் அ.எண்.**786/2015**–ல் தாக்கல் செய்த மனுவில் முறையாக விசாரணை செய்யப்பட்டு

"மின்னிணைப்பு எண்.**203–011–016** திரு. அசோகன் பெயரிலிருந்து காரியதரிசி மணிநகரம் உறவின்முறை என்ற பெயருக்கு பெயர்மாற்றம் செய்யும்பொழுது எந்த ஆட்சேபணையோ நீதிமன்ற உரிமையியல் வழக்கு விபரம் மின்வாரியத்திற்கு தெரியாத காரணத்தினாலும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை விதிகளின்படி ஆவணங்கள் பெற்று பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என முடிவு செய்து மனு மன்றத்தில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. மேலும், மனுதாரரால் செலுத்தப்பட்ட காப்புத்தொகையை அவர் கோரும் பட்சத்தில் மின்சார ஒழுங்குமுறை விதிகளின்படி திருப்பித்தர நடவடிக்கை எடுக்கப்படும்" என்று மேலே கண்ட படி சரியான தீர்ப்பும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## 7. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

**7.1** மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரர்கள் ஆகிய அனைவரும் தங்களுடைய தரப்பு வாதத்தை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக **9.9.2015** அன்று மின்குறைதீர்ப்பாளரால் கேட்புரை நடத்தப்பட்டது.

7.2 9.9.2015 ல் எதிர்மனுதாரர்–1 தலைவர், அருப்புக்கோட்டை மணி நகரம் சத்திரிய நாடார் உறவின்முறை பொது அபிவிருத்தி டிரஸ்ட் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கேட்புரை தள்ளிவைக்கப்பட்டு 30.10.2015 அன்று நடத்தப்பட்டது.

7.3 மேல்முறையீட்டாளரின் சார்பில் திரு. P. தேரிராஜன், வழக்கறிஞர் அவர்கள் இருநாட்களிலும் கலந்து கொண்டு அவரின் வாதத்தை எடுத்துரைத்தார்.

7.3 திரு. M.S. பாலசுப்பிரமணிய அய்யர், வழக்கறிஞர் அவர்கள் 30.10.2015–ல் நடந்த கேட்புரையில் எதிர்மனுதாரர்–1 அவர்களின் சார்பில் கலந்து கொண்டு அவரது தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

7.3 எதிர்மனுதாரர்(2) திரு. ஜெயக்குமார் இளநிலை பொறியாளர்/அருப்புக்கோட்டை அவர்கள் இரண்டு நாட்களிலும் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

**8. கேட்புரையின்பொழுது <u>மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் அவர்கள் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

8.1 திரு. P. தேரிராஜன், வழக்கறிஞர் அவர்கள் மேல்முறையீட்டாளரது மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 வழக்கறிஞர் அவர்கள் மேல்முறையீட்டாளரின் தகப்பனார் திரு. சங்கரலிங்க நாடார் அவர்களின் பெயரில்தான் அந்த மின்இணைப்பு பெறப்பட்டது என்றும் அந்த மின்இணைப்பு உள்ள வளாகத்தின் அடிமனை எதிர்மனுதாரர்(1)க்கு சொந்தமானது என்றும் ஆனால், கட்டிடங்கள் அனைத்தும் மேல்முறையீட்டாளரின் தகப்பனாரால் கட்டப்பட்டவை என்றும் திரு. சங்கரலிங்க நாடாரின் வாரிசுகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள பாகப்பிரிவினையின் படி மேற்கண்ட கட்டிடங்களும் அதில் நடைபெறும் தொழிலும் மேல்முறையீட்டாளருக்கு சொந்தம் என்று தெரிவித்தார்.

8.3 மேலும், திரு. சங்கரலிங்க நாடார் பெயரிலிருந்து மின்இணைப்பு எண்.203–11–016 அந்த வளாகத்தில் அதனை உபயோகித்து வரும் மேல்முறையீட்டாளரின் பெயருக்கு 2000 ஆண்டில்

மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே, அவரின் சம்மதமில்லாமல் அந்த மின்இணைப்பின் பெயர் மாற்றம் தவறு என்று வாதிட்டார்.

8.4 மேற்கண்ட மின் இணைப்பிலுள்ள பிணைவைப்புத் தொகை (security deposit) மேல்முறையீட்டாளருக்கு சொந்தமானது அவரின் அனுமதியில்லாமல் மின்இணைப்பிலுள்ள பிணைவைப்பு தொகையை எதிர்மனுதாரர்–1 அவர்களுக்கு மாற்றியதும் தவறு என்று வாதிட்டார்.

8.5 மேலும், மேற்கண்ட வாளகத்தின் உரிமை பிரச்சனையில் அருப்புக்கோட்டை டி.மு. நீதிமன்றத்தில் நடைபெறுகின்ற வழக்கில் சாட்சியம் அளித்துள்ள இளமின்பொறியாளர் மேற்கண்ட வழக்கு நடப்பது உரிமம்தாரருக்கு தெரியாது எனவே, பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது பொய்யுரையாகும் என்றும் வழக்கு நிலுவையிலுள்ள பொழுது பெயர் மாற்றம் செய்தது தவறு என்றும் வாதுரை புரிந்தார்.

8.6 திரு. அசோகன், இன்றுவரை அந்த வளாகத்தில் தன்னுடைய தொழிலை செய்து வருகிறார். அந்த நிலம்தான் அவருக்கு சொந்தமில்லை. அதற்கு வாடகை செலுத்தி வருகிறார். கட்டிடங்கள் அவருக்கு சொந்தம். எனவே, அவர் உபயோகித்துவரும் அவருடைய பெயரிலுள்ள மின்இணைப்பை நில உடமைதாரருக்கு மாற்றியது தவறு என்றும் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(4)இன்படி உறைவிடதாரர் பெயரிலும் மின்இணைப்பு வழங்கலாம் என்று இருப்பதால் நில வாடகைதாரரான மேல்முறையீட்டாளர் பெயரிலுள்ள மின்இணைப்பை நில உடமைதாரரின் பெயரில் மாற்றியது செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்றும் கோரினார்.

8.7 திரு. அசோகன், பெயருக்கு மின்இணைப்பை மாற்றம் செய்யும்பொழுது மற்ற வாரிசுகள் சம்மதம் கடிதம் கொடுத்துள்ளார்கள் என்று மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அருப்புக்கோட்டையில் நடந்த வழக்கு எண்.169/2004ல் எதிர்மனுதாரரின் வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார். எனவே, அந்த பெயர்மாற்றம் சரியானது என்றும் வாதிட்டார்.

8.8 மேலும் மேற்கண்ட மின்இணைப்பை திரு. சங்கரலிங்க நாடார் பெயருக்கு மாற்றுவதிலும் தனக்கு ஆட்சேபனை இல்லை என்றும் தெரிவித்தார்.

## 9. <u>எதிர்மனுதாரர்(2) கேட்புரையின்பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

9.1 திரு. S.M. ஜெயகுமார், இளநிலை பொறியாளர்/அருப்புக்கோட்டை அவர்கள் கேட்புரையின்பொழுது தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்களை வலியுறுத்தினார்.

9.2 அவர் தான் அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 169/2004ல் சாட்சியம் அளித்துள்ளது உண்மைதான் என்றும் மேற்கண்ட வழக்கு நிலுவையிலுள்ளது தனக்கு தெரியும் என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவிக்கும் O.S. No.57/2014, O.S. No.58/2015 C.T.O.P. No.1/2008, O.S. No.160/1998 போன்ற வழக்குகளும் நிலுவையிலுள்ளன என்றும் ஆனால், அவ்வழக்குகளில் மின்வாரியம் ஒருதரப்பினரே அல்ல என்பதால், அதில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகள் தமக்கு தெரியாது என்று வாதிட்டார்.

9.3 மேலும், வரிவிதிப்பு மனுதாரரின் பெயரிலிருந்து Trustee M.N.U.T என்று மாற்றப்பட்டுவிட்டதால், மின்இணைப்பின் பெயர் மாற்றமும் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார். மேலும், மின்இணைப்பை மாற்றுவதற்கு முன்பு எந்தவிதமான ஆட்சேபனையும் பெறப்படவில்லை என்றும் வாதிட்டார்.

9.4 மேலும், தாவா சொத்தில் மேல்முறையீட்டாளர் வாடகைதாரர் என்பதால் மின்இணைப்பை கட்டிட உரிமையாளர் பெயரில் மாற்றியதை வாடகைதாரர் ஆட்சேபனை செய்ய இயலாது என்றும் வாதிட்டார்.

9.5 மேலும், ஒரு மின்இணைப்பை பெயர் மாற்றம் செய்யும்பொழுது மின்இணைப்பின் உரிமையாளரிடம் சம்மதக் கடிதம் பெறவில்லை என்றும் அது ஒரு Procedure lapse என்றுதான் எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்றும் வாதிட்டார்.

## 10. <u>எதிர்மனுதாரர்(1) சார்பில் கேட்புரையின்பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள்</u>

10.1 திரு. M.S. பாலசுப்பிரமணிய அய்யர் வழக்கறிஞர் அவர்கள் கேட்புரையின்பொழுது கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார். அவர் எதிர்மனுதாரர்(1)ன் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

10.2 வழக்கறிஞர் அவர்கள் மேற்கண்ட சொத்தில் திரு. சங்கரலிங்க நாடார் பிரதர்ஸ் என்ற நிறுவனம் முதலில் நிலத்தின் சொந்தக்காரரான அருப்புக்கோட்டை மணி நகரம் சத்திரிய இந்து நாடார்கள் உறவின் பொதுமகமை (பொது மகமை என்று இனி குறிப்பிடப்படும்) யின் நிர்வாகிகளிடம் ஒரு ஒப்பந்தம் 16.2.1966 செய்துள்ளார். அந்த ஒப்பந்ததின்படி புஞ்சை நிலம், அதிலுள்ள கிணறும் அதன் நீர் இறைக்க பயன்படும் சாமான்களும் அவருக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அந்த இடத்தில் தேவையான கட்டிடங்களும் கட்டிக்கொள்ள அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், மேற்கண்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தை முடித்து கொள்ளும்பொழுது அதிலுள்ள கட்டிடங்களை அப்படியேதான் விட்டுச் செல்ல வேண்டும். அதன்பிறகு அந்த கட்டிடங்கள் நிலத்தின் உரிமையாளருக்கு Transfer of Property Actன் பிரிவு 108இன்படி சொந்தமாகிவிடும். அதற்கு தனியாக ஒரு transfer deed போடவேண்டியது இல்லை. பொது மகமையை நிர்வாகிக்கும் திரு. சங்கரலிங்க நாடாருக்கும் மேற்கண்ட இடத்தை வாடகைக்கு விடுவதற்கு 1.7.1987ல் இரண்டாவது ஒப்பந்தம் கையெழுத்து ஆகியுள்ளது. முதல் ஒப்பந்தம் சங்கரலிங்க நாடார் & பிரதர்ஸ் என்ற ஸ்தாபனத்திற்கும் பொது மகமைக்கும் என்பதால் அப்பொழுது கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் இரண்டாவது ஒப்பந்தம் ஏற்படுத்தும் பொழுது ஒப்பந்ததாரர் திரு. சங்கரலிங்க நாடார் என்று மாறுபட்டுள்ளதால் (சங்கரலிங்க நாடார் & பிரதர்ஸ் என்பதற்கு பதிலாக ) ஒப்பந்தம் நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடங்களுக்கும் என்று ஆகிவிடுகிறது. எனவே, சங்கரலிங்க நாடாரின் வாரிசுகளுக்கு கட்டிடம் சொந்தம் என்பது சட்டப்படி சரியல்ல. எனவே, அடிமனையும் அதிலுள்ள கட்டிடங்களும் பொது மகமைக்குத்தான் சொந்தம் என்றும் வாதிட்டார். மேலும், முதல் ஒப்பந்த காலங்களில்தான் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன என்பதால் சங்கரலிங்க நாடாருடன் மட்டும்

ஒப்பந்தம் உள்ள காலத்தில் அடிமனையும் அதிலுள்ள கட்டிடங்களும் பொது மகமைக்குதான் சொந்தம் என்றும் வாதிட்டார்.

10.3 வழக்கறிஞர் அவர்கள் திரு. சங்கரலிங்க நாடார் அவர்களுக்கு அவரின் பெயரில் மின்இணைப்பு வழங்க பொதுமகமை ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. ஆனால், திரு. சங்கரலிங்க நாடார் அவர்களின் வாரிசு ஆன திரு. அசோகன் பெயருக்கு மாற்றும் பொழுது பொதுமகமையின் ஒப்புதல் பெறவில்லை என்றும் வாதிட்டார்.

10.4 மேலும், திரு. அசோகன் பெயருக்கு மேற்கண்ட மின்இணைப்பை மாற்றம் செய்யப்பட்டது மின் வாரிய விதிகளின்படிதானா என்பதையும் ஆராயவேண்டும் என்று வாதுரை புரிந்தார்.

10.5 வழக்கறிஞர் மேற்கண்ட இடத்திலுள்ள கட்டிடங்கள் தனக்கு உரிமையில்லை என்பதை ஏற்றுக்கொண்டால் மின்இணைப்பை திரு. S. அசோகன் பெயரில் வாடகைதாரர் என்ற முறையில் வைத்துக்கொள்ள தனக்கு ஆட்சேபனை இல்லை என்றும் வாதிட்டார்.

10.6 மேலும், வாரிய விதிகளின்படி பொது மகமையின் பெயருக்கு மேற்கண்ட மின்இணைப்பை மாற்றியதில் Procedural lapse இருப்பதால் அந்த மின்இணைப்பை ஏற்கனவே இருந்த திரு. அசோகன் பெயருக்கு மாற்ற முடியாது என்றும் ஏனெனில் திரு. அசோகன் பெயருக்கு மேற்கண்ட மின்இணைப்பு மாற்றம் செய்யும்பொது பொது மகமையின் சம்மதம் பெறப்படவில்லை என்றும் வாதிட்டார்.

10.7 மேலும், வாரிய விதிகளின்படி பெயர் மாற்றம் தவறு என்ற காரணத்தால் மின்இணைப்பின் பெயர்மாற்றம் தவறு என்று முடிவு எடுக்க நேர்ந்தால் திரு. அசோகன் பெயருக்கு மின்இணைப்பை மாற்றுவதற்கு வழங்கப்பட்ட ஆணையும் வாரிய விதிகளின்படி இருந்தால்தான் அவ்வாறு செய்யமுடியும் என்றும், அவ்வாறு அசோகன் பெயருக்கு மின்இணைப்பு மாற்றிய ஆணை வாரியவிதிகளுக்கு இணங்க இல்லை எனில் முதலில் உள்ள திரு. சங்கரலிங்கம் பெயருக்குதான் மாற்ற வேண்டும் என்றும் வாதுரைபுரிந்தார்.

11. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

11.1 இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர், எதிர்மனுதாரர்–1, மற்றும் எதிர்மனுதாரர்–2 ஆகியோரின் மேல்முறையீடு பதிலுரை மற்றும் நேரில் எடுத்துரைத்த வாதங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் தெரிகின்றன.

தாவா உள்ள இடத்தின் உரிமையை பற்றியும் மற்றும் வாடகைதாரரை காலி செய்வது சம்பந்தமாகவும் நீதிமன்றங்களில் கீழ்கண்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று தெரிகிறது.

(i) O.S. No.169/2004, (ii) O.S. No.160/1998, (iii) O.S. No.57/2014, (iv) O.S. No.58/2014, (v) O.S. No.114 of 2005.

11.2 மேற்கண்ட இடத்தின் உரிமையாளர் யார் மற்றும் கட்டிடங்களின் உரிமையாளர் யார் என்பது பற்றிய பிரச்சனைகளுக்கு தகுதிவாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்திற்குதான் அதிகாரம் உண்டு. மின்குறைதீர்ப்பாளருக்கு அந்த அதிகாரம் இல்லை.

11.3 என் முன்னால் உள்ள இந்த வழக்கில் மின்இணைப்பு எண்.203–011–16 திரு. அசோகன் பெயரிலிருந்து, Trustee, M.N.U.T. பெயரில் மாற்றியது சரிதானா என்பதுதான் தீர்வுகாண எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேற்படி பிரச்சனைக்கு தீர்வு காண கீழ்க்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) ஒரு மின்இணைப்பை ஒருவர் பெயரிலிருந்து மற்றொருவர் பெயருக்கு மாற்றம் செய்ய வேண்டும் எனில் மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதிகளின்படி கூறப்பட்டுள்ள விதிகள் என்ன ?

(ii) திரு. அசோகன் பெயரிலிருந்து Trustee, M.N.U.T. என்ற பெயருக்கு மின்இணைப்பு எண்.203–011–16 ஐ மாற்றியுள்ளது மின்சார வழங்கல் விதித்தொகுப்பில் கூறப்பட்டுள்ள விதிகளின்படி சரிதானா ?

## 12. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கானதீர்வு</u>

**12.1** ஒரு மின்இணைப்பின் பெயர் மாற்றத்திற்கான விதிகளை தெரிந்துகொள்ள நாம் தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி5(7)ஐ ஆராய வேண்டும். அந்த 5(7) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"5. Miscellaneous Charges :***

*xxx xxx xxx*
*xxx xxx xxx*
*xxx xxx xxx*

*(7) Name Transfer charge*

*(i) Every application for transfer of name consequent to the death of the consumer shall be in Form (1) in Appendix to this code accompanied by :*

*(a) Legal heirship certificate from the Tahsildar concerned or proof of ownership such as local body tax receipts (latest).*

*(b) No objection certificate from other legal heirs, if any, (or) an indemnity bond in Form (3) in Appendix to this Code on non-judicial stamp paper for a value of Rs.80/- and a sworn-in affidavit and authenticated by a Notary Public or by a gazetted officer to show the status of other legal heirs.*

*(c) Fresh application with fee to be specified by the Commission and agreement form.*

*(ii) Every application for transfer of name, in other cases, shall be in Forms (1) and (2) in Appendix to this Code accompanied by-*

*a) The document supporting the transfer with an undertaking in Form (4) in Appendix to this Code*

*(b) Consent letter from the consumer for the transfer of the Security Deposit if it is not included in the document supporting the transfer*

*(c) Fresh application with fee to be specified by the Commission and agreement form.*

*Explanation: The name transfer is effected only for such services which are not under disconnection.*

**12.2** மேற்கண்ட விதிகளை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது ஒரு மின்இணைப்பின் பெயர் மாற்றம் ஒரு நுகர்வோர் இறந்தால் எப்படி செய்யப்படவேண்டும் என்று மின்வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7)(i)ல் விவரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாமல் மற்றநேர்வில் மின்இணைப்பின் பெயர்மாற்றம் எவ்வாறு செய்யப்படவேண்டும் என்பது மின்வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7) (ii)ல் விவரிக்கப்பட்டுள்ளது.

12.3 மேல்முறையீட்டாளர் திரு. அசோகன் பெயரில் இருந்து Trustee, M.N.U.T என்ற பெயருக்கு மாற்றம் என்பது 5(7)(ii)ன்படிதான் இருக்கவேண்டும் என்பதால் அந்த விதிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

(அ) பெயர்மாற்றம் கோரும் விண்ணப்பங்கள் மின்வழங்கல் விதித்தொகுப்பின் பிண்ணிப்பிலுள்ள படிவம் (1)மற்றும் (2)ன்படிதான் இருக்கவேண்டும். மேலும், பிற்கண்ட ஆவணங்களையும் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

(a) வழங்கல் விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (4)ல் உள்ள உறுதிஏற்புடன் பெயர் மாற்றத்திற்கான அடிப்படை ஆவணம்.

(b) காப்புவைப்புத்தொகை மாற்றம் சம்பந்தமாக பெயர்மாற்றத்திற்கான அடிப்படை ஆவணத்தில் எதுவும் கூறப்படவில்லை என்றால் காப்புவைப்புத்தொகை மாற்றுவதற்கான நுகர்வோரின் சம்மதக்கடிதம் , அத்தகைய கடிதம் தரப்படாவிடில் புதிதாக காப்புத்தொகை கட்டவேண்டும்.

(c) ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம், புது விண்ணப்பம் மற்றும் இசைவு பத்திரம் .

12.4 மேலும், பெயர்மாற்றத்திற்கான விண்ணப்பம் படிவம் (1) மற்றும் (2)ன்படி இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதால் அந்த படிவங்களின் மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***[Appendix] FORM-1 [Refer to Regulation 5(7)]***

*To*

*The Designated Engineer,*

*……………………………,*

*………….*

*I, Thiru ....................................... (S/o)/ (D/o)/ (W/o) .................................... aged ……. Years, am residing at*

*(Full Address & Phone No.)*

*…………………………………………………………………………………………..............*

*...................……………………………………………………………………………………*

*……*

*The premises bearing Door No. .............. Name of Street....................................*

*Village / Town ……………………………….. Taluk with Service Connection No.*

*...... Tariff ……………………………... Distribution*

*…………………………………….. In the name of*

*………………………………………...*

*S/o………………………………………………………… is in my possession.*

*(1) The Xerox copy of the sale deed in my favour for the said premises is enclosed.*

*or*

*The property tax receipt for the above property is given in my name and Xerox copy of the same duly attested by Gazetted Officer is enclosed.*

*or*

*Metro Water / Sewerage Connection is given in my name and the Xerox copy of the same duly attested by Gazetted Officer is enclosed.*

*or*

*Legal Heirship Certificate from the Tahsildar concerned*

*(2) Application and Agreement Form*

*(3) Indemnity Bond on Rs.80/- Non-judicial stamp paper ( Applicable in the case of name transfer due to legal succession)*

*I undertake to pay amounts outstanding against the Account No. ……… which are found to be due at a later date.*

*I request that the name of Service No. …………………… may kindly be changed to my name.*

*Signature of transferee,*
*Full Address.*

*Place:*
*Date :*

**FORM-2**

**NAME TRANSFER FORMS [REFER TO REGULATION 5 (7)]**

*(To be used as a consent letter from transferor in case of sale etc.)*

*To*

*The Designated Engineer / …………..*

*Address of the Licensee Engineer*

*I.........................................(S/o. D/o. W/o.) ........................................owner of premises bearing Door No. .............(Name of the Street …….. Place …………………..) hereby give my consent for the transfer of service bearing A/c. No. .................standing in my name / in the name of ……… to Thiru/Tmty.] ......................................S/o. D/o. W/o. .........................................since I had sold my house to him/her..................................*

*The transfer may be effected with available deposit / subject to the condition that the transferee pays the security deposit and other charges *.*

*Signature of transferor,*
*Full Address.*

*Place*
*Date*
** Strike out the portion not required"*

**12.5** மேற்கண்ட படிவங்களை கூர்ந்து ஆராயும்பொழுது நாம் அறிவது படிவம் (1) என்பது மின்இணைப்பின் பெயர் மாற்றம் கோருவோர் பெயர் மாற்றத்திற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பம் ஆகும். அதில் மின்இணைப்பு உள்ள இடம் அவருக்கு உடமை என்பதற்கான ஆவணத்தின் நகலையும் இணைக்க வேண்டும்.

**12.6** படிவம்(2) என்பது, மின்இணைப்பு யாரின் பெயரில் உள்ளதோ அவர் மேற்கண்ட மின்இணைப்பின் பெயர்மாற்றத்திற்கு சம்மதம் தெரிவிக்கும் சம்மதக்கடிதம் ஆகும். அந்தசம்மத கடிதத்தில் மின்இணைப்பின் கணக்கிலுள்ள வைப்பு தொகையுடன் பெயர் மாற்றம் செய்யலாம் என்றோ அல்லது வைப்பு தொகையில்லாமல் பெயர் மாற்றம் செய்யலாம் என்றோ மேற்கண்ட மின்இணைப்பின் உரிமையாளர் தெரிவிக்கலாம்.

**13.** **வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு**

**13.1** மேல்முறையீட்டாளர் வழக்கறிஞர் மின்இணைப்பின் உரிமைதாரரான திரு. அசோகன் அவர்களின் சம்மதம் இல்லாமல் மின்இணைப்பின் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது தவறு என்று வாதாடியுள்ளார்.

13.2 மேலும், மேற்கண்ட மின்இணைப்பில் உள்ள காப்புத்தொகை திரு. சங்கரலிங்க நாடார் அவர்களாலும் திரு. அசோகன் அவர்களாலும் கட்டப்பட்டவை ஆகும். எனவே, மேல்முறையீட்டாளரின் சம்மதமில்லாமல் மின்இணைப்பில் இருந்த காப்புத்தொகையுடன் மின்இணைப்பின் பெயர் மாற்றம் செய்தது தவறு என்று வாதிட்டுள்ளார்.

13.3 எதிர்மனுதாரர்–1 நகராட்சியின் வரிவிதிப்பில் பெயர் மாற்றம் Trustee, M.N.U.T. என்று செய்யப்பட்டுள்ளதால் அவர்கள் தான் உரிமையாளர் என்றும் எனவே பெயர்மாற்றம் சரிதான் என்று வாதிட்டுள்ளார்.

13.4 எதிர்மனுதாரர்–2 Trustee, M.N.U.T. அவர்களின் விண்ணப்பத்தின் பெயரில் வரிவிதிப்பு மேல்முறையீட்டாளரின் பெயரிலிருந்து Trustee, M.N.U.T. என்று மாற்றப்பட்டுள்ளதால் அந்த ஆவணத்தின்படி மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது வரிவிதிப்பின் பெயர்மாற்றத்தை ஆட்சேபிக்காத மேல்முறையீட்டாளர் அதன் தொடர் செயல்முறையான மின்இணைப்பின் பெயர்மாற்றத்தை ஆட்சேபிப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்று வாதிட்டுள்ளார்.

13.5 மேலும், மேற்கண்ட சொத்தின் உரிமையின் மீது மேல்முறையீட்டாளருக்கும் எதிர்மனுதாரர்–1 அவர்களுக்கும் வழக்குகள் உள்ளன என்பதை மேல்முறையீட்டாளர் தெரிவித்து ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

13.6 மின்வழங்கல் தொகுப்பில் விதி 5(7)(ii)–ன்படி மின்இணைப்பின் உரிமையாளரிடம் ஒப்புதல் பெறாமல் மின்இணைப்பின் பெயர்மாற்றம் செய்தது விதிப்படி சரிதானா என்ற மின்குறைதீர்ப்பாளரின் கேள்விக்கு எதிர்மனுதாரர்–2 இளமின் பொறியாளர் அவர்கள் மின்இணைப்பின் உரிமையாளரிடம் ஒப்புதல் பெறப்பட வில்லை என்பது Procedure lapse என்று பதிலுரைத்தார்.

13.7 எதிர்மனுதாரர் சமர்ப்பித்துள்ள பெயர்மாற்றம் கோரும் விண்ணப்பத்தை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, பெயர்மாற்றத்திற்கு சம்மத கடிதம் திரு. S. அசோகன் அவர்களிடமிருந்து படிவம்–2ல் பெறப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை என்று தெரிகிறது. படிவம்–2 சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதில் திரு. S. அசோகனின் கையொப்பம் இல்லை. எனவே, பெயர் மாற்றம் மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7)(ii)–ல் கூறியுள்ளபடி படிவம்–2 சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் அந்த பெயர் மாற்றம் மேற்கண்ட விதி 5(7)(ii)–ற்கு இணங்க இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

13.8 மேலும், காப்பு வைப்புத்தொகையும் ரூ.27,600/– மட்டுமே Trustee MNUT அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. ஆனால், மேற்கண்ட மின்இணைப்பில் தற்பொழுது உள்ள காப்பு வைப்புத்தொகை ரூ.1,41,008/–ஆகும்.

13.9 மேலும், காப்புத்தொகையை தன்னுடைய அனுமதியில்லாமல் Trustee MNUT என்ற பெயருக்கு மாற்றப்பட்டது தவறு என்று மேல்முறையீட்டாளரும் வாதிட்டுள்ளார்.

13.10 மேலும், மின் வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7)(ii)(b)–ன்படி மின் இணைப்பிலுள்ள காப்புவைப்புத்தொகையை மாற்றுவதற்கு சம்மத கடிதம் அல்லது மாற்றலாம் என்பதற்கு ஆதாரமான ஆவணங்கள் எதுவும் இல்லையெனில் மின்இணைப்பு கோருவோர் காப்பு வைப்புத்தொகையை செலுத்த வேண்டும் . ஆனால், இந்த பெயர் மாற்றத்தில் பெயர்மாற்றம் கோரியவர் காப்புத்தொகையை மாற்றுவதற்கு முன்பு இருந்த மின்இணைப்பின் சொந்தக்காரரின் சம்மதக்கடிதம் சமர்ப்பிக்கவில்லை. ஆனால், இருக்கும் காப்பு வைப்புத்தொகையுடன் தேவையான காப்பு தொகை மட்டும்தான் செலுத்தியுள்ளார். மின்இணைப்பின் உரிமம்தாரர் செலுத்திய காப்பு வைப்பு தொகை அவரின் சம்மதமில்லாமல் மின்இணைப்பின் பெயர்மாற்றம் செய்யும்பொழுது மாற்றியது வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7)(ii)(b)–ன்படி தவறு என்று தீர்வு செய்யப்படுகிறது.

13.11 மேற்கண்ட பத்தியிலுள்ள தீர்வுகளின்படி எதிர்மனுதாரர்–1ன் பெயரில் மின்இணைப்பு எண்.203–011–16ஐ பெயர் மாற்றியது மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7)(ii)ற்கு இணக்கமாக இல்லை என்று தெரிகிறது. எனவே, திரு. S. அசோகன் பெயரிலிருந்து Trustee M.N.U.T. என்ற பெயருக்கு மின்இணைப்பை மாற்றியது தவறு என்று தீர்வு செய்யப்படுகிறது.

13.12 எதிர்மனுதாரர்–1ன் வழக்கறிஞர் விதிகளின்படி Procedural lapse இருக்கிறது என்பதால் மின்இணைப்பை மீண்டும் அசோகன் பெயருக்கு மாற்றவேண்டும் என்றால், திரு. சங்கரலிங்க நாடாரிடமிருந்து திரு. S. அசோகன் பெயருக்கு மாற்றம் செய்தது மின்சார வழங்கல் விதிப்படி இருந்தால்தான் முடியும் என்று வாதிட்டார். மேலும், திரு. சங்கரலிங்க நாடார் பெயரில் மின்இணைபை மாற்றுவதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என்றும் வாதிட்டார்.

13.13 மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அருப்புக்கோட்டையில் நடந்த வழக்கு எண்.169/2004ல் இந்த வழக்கின் எதிர்மனுதாரர்–2 திரு. ஜெயக்குமார் இளமின்பொறியாளர், கொடுத்த வாக்குமூலத்தில் திரு. சங்கரலிங்க நாடார் பெயரிலிருந்த மின் இணைப்பை திரு. அசோகன் பெயருக்கு மாற்றம் செய்ததற்கான ஆவணங்களை சமர்ப்பித்தள்ளார் என்று தெரிவிக்கப்பட்டள்ளது. அதில் தெரிவித்துள்ள சம்பந்தப்பட்ட ஆவணங்கள் கீழ் வருவன என்று வாதிட்டார்.

(i) கூடுதல் தொகை செலுத்தியதற்கான ரசீது ஆவணம் வா.ச.ஆ.28

(ii) பெயர் மாற்றத்திற்கு அசோகன் பணம் செலுத்தியதற்கான ஆவணம் வா.ச– ஆ30

(iii) பெயர் மாற்றத்தின் பொழுது எடுத்த சோதனை அறிக்கை ஆவணம் வா.ச–த. 31.

13.14 மேலும், சங்கரலிங்க நாடார் அவர்களின் வாரிசுகள் சம்மதக் கடிதம் 16.10.2010ல் கொடுத்துள்ளார்கள் என்றும் தெரிவித்தார்.

13.15 மேலும், மின்இணைப்பை திரு. S. அசோகன் பெயரில் மாற்ற வேண்டும் என்றும் திரு. சங்கரலிங்க நாடார் பெயரில் மாற்றுவதற்கும் தனக்கு ஆட்சேபனையில்லை என்று தெரிவித்தார்.

13.16 மேலும், 23.11.2015 நாளிட்ட கடிதத்துடன் கீழ்கண்ட ஆவணங்களின் நகல்களை அளித்துள்ளார்.

(1) திரு. சங்கரலிங்க நாடார் அவர்களின் வாரிசுரிமை சான்றிதழ்

(2) உடன்பிறந்த வாரிசுகளின் சம்மத ஒப்பந்த பத்திரம்

(3) பாகப்பிரிவினை பத்திரம்

(4) Extract from the Demand register of Property Education tax, library Cess from 1994–95 to 2007–2008

(5) இளமின் பொறியாளரின் 6.1.2001 நாளிட்ட காப்புதொகை கேட்பு கடிதம்

(6) கூடுதல் காப்பு தொகை ரூ.8370/– செலுத்தியதற்கான திரு. S. அசோகன் பெயரிலுள்ள ரசீது

(7) கூடுதல் மின்பளு பெறுவதற்கு பணம் செலுத்தகோரும் 21.7.2001 நாளிட்ட இளமின் பொறியாளரின் கடிதம்

(8) பெயர் மாற்ற கட்டணம் ரூ.750/– மற்றும் நிலுவை தொகை ரூ.179/– ஆக மொத்தம் ரூ.929/– செலுத்தியதற்கான 27.12.2000 நாளிட்ட திரு. S. அசோகன் பெயரிலுள்ள ரசீது

(9) Test Report 8.1.2001 நாளிட்டது.

13.17 எதிர்மனுதாரர்–2 தங்களிடம் தற்பொழுது திரு. சங்கரலிங்க நாடார் பெயரிலிருந்து மின்இணைப்பை திரு. S. அசோகன் பெயருக்கு மாற்றிய ஆவணங்கள் இல்லை என்று தெரிவித்தார்.

13.18 இங்கு என் முன்னால் உள்ள வழக்கில் உள்ள கோரிக்கை என்னவென்றால் மின்இணைப்பு எண்.203–011–16ஐ Trustee, M.N.U.T என்று மாற்றம் செய்ததை ரத்து செய்து மீண்டும் மனுதாரருக்கு பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்பது ஆகும். ஆனால், மேல்முறையீட்டாளர் பெயருக்கு அதாவது திரு. சங்கரலிங்க நாடார் பெயரிலிருந்து திரு. S. அசோகன் பெயருக்கு 2000 ஆண்டு ஏற்கெனவே செய்த மாற்றம் சரிதானா என்பது சரிபார்க்கப்பட்டு அதுசரி என்றால்தான் மீண்டும் S. அசோகன் பெயரில் மாற்ற முடியும் என்ற வாதம் தற்பொழுது மின்குறைதீர்ப்பாளர் முன்பு எதிர்மனுதாரர்(1) அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. திரு. சங்கரலிங்க நாடார் பெயரிலிருந்து திரு. S. அசோகன் பெயருக்கு மின் இணைப்பின் உரிமை மாற்றம் செய்தது சரியா என்பது பற்றி விருதுநகர் மின் பகிர்மான வட்டத்தின் மின்குறைதீர் மன்றத்தில் விசாரிக்கப்படவில்லை. எனவே, அது புதிய கோரிக்கை (issue) என்று ஆகிவிடுவதால் அந்த வாதத்தை இந்த வழக்கின் தீர்வுக்கு நான் எடுத்துக் கொள்ளவில்லை. எனவே, பத்தி 13.11இல் உள்ளபடி, மின்இணைப்பு எண்.203–011–16ஐ Trustee, M.N.U.T. என்ற பெயருக்கு மாற்றம் செய்தது மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7)(ii)க்கு இணங்க இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 14. <u>முடிவுரை</u>

14.1 மின்இணைப்பு எண்.203–011–16இன் பெயரை திரு. S. அசோகன் என்பதிலிருந்து Trustee M.N.U.T. என்று பெயர் மாற்றம் செய்தது மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7)(ii)ற்கு இணங்க இல்லை என்பதால் மேற்கண்ட பெயர் மாற்றம் தவறு என்று தீர்வு செய்யப்படுகிறது.

14.2 எனவே, மேற்கண்ட மின்இணைப்பை Trustee, M.N.U.T என்று பெயர் மாற்றம் செய்த Lr. No. AAO / RB / APC / F. Name Transfer / D. No.486 / 2014–2015 dt. 19.11.2014 உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. எனவே, மேற்கண்ட மின் இணைப்பு எண்ணின் பெயரை மாற்றத்திற்கு முன்பு இருந்த திரு. S.அசோகன் பெயருக்கு மாற்றப்படவேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

14.3 இவ்வாணையை நிறைவேற்றியது சம்பந்தமான அறிக்கையை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு உத்தரவு இடப்படுகிறது.

14.4 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.52/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. S. அசோகன்,
த/பெ சங்கரலிங்கம்,
185ஏ, மதுரை ரோடு,
அருப்புக் கோட்டை.

2) அருப்புக்கோட்டை மணி நகரம் சத்திரிய நாடார் உறவின்முறை
பொது அபிவிருத்தி டிரஸ்ட், அதன் தற்காலிக தலைவர்,
காமாட்சிபுரம்,
மணி நகரம், அருப்புக்கோட்டை.

3) இளமின்பொறியாளர்,
பகிர்மானம்/நகரம்/வடக்கு,
விருதுநகர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அருப்புக்கோட்டை.

4) மேற்பார்வை பொறியாளர்,
விருதுநகர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
65/1, ராமமூர்த்தி ரோடு,
விருது நகர் – 626 001.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

6) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

7) உதவி இயக்குநர் (கணினி) – மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.